# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி

## O.S. No.19/2023

2025 –ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 02 –ம் நாள் வாதி தரப்பு சாட்சியின் வா.சா.1 வாக்குமூலம் 1969ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின் ஏற்பாட்டின்படி இந்நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலரான திரு. V. பாண்டியன், Bench Clerk (Gr–III) – I/C அவர்களால் சாட்சியம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

**நாள் : 02.09.2025**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. சாமிநாதன் (PW –1) | வயது | : | 78 /2025 |
| க/த பெயர் | : | திரு. தங்கவேல் | தொழில் | : | விவசாயம் |
| முகவரி | | மன்னார்குடி | வட்டம் | | மன்னார்குடி |

**1ம் பிரதிவாதியின் தரப்பில் குறுக்கு விசாரணை**

1) சுபாவிற்கு நான் கிரயம் செய்து கொடுத்த சொத்தானது எனது குடும்ப சொத்தா என்றால் எனது தனித்த சொத்து. அந்த சொத்து எனது தனித்த சொத்து என்பதால் நான் கிரயம் வாங்கினேனா என்றால் நான் வாங்கவில்லை, எனது பாட்டனார் வாங்கினார். அதன் சர்வே எண் என்னவென்றால் ஞாபகம் இல்லை. 27.09.2022 ல் சுபா என்பவருக்கு சொத்தினை எழுதி கொடுத்தேன் என்றால் சரிதான். **(தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் சுபாவிற்கு நான் எழுதி கொடுத்த கிரய ஆவணம் இதுதான் என்றால் கிரயம் எழுதி கொடுத்தது தெரியும், இந்த ஆவணமா என்று என்னால் சொல்லமுடியாது).**
2) எத்தனை சதுரடிக்கு இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் விஸ்தீரணம் சரியாக ஞாபகம் இல்லை, 1900 சதுரடி வாக்கில் இருக்கலாம். 1ம் பிரதிவாதி ரவிச்சந்திரன் 2 முதல் 4 பிரதிவாதிகளிடம் இருந்து எத்தனை சதுரடி கிரயம் வாங்கினார் என்றால் கிரயம் வாங்கவில்லை. சுபா கிரயம் வாங்கிய சொத்தின் சர்வே எண்ணும், ரவிச்சந்திரன் கிரயம் வாங்கிய சொத்தின் சர்வே எண்ணும் திருவாரூர் மாவட்ட நீதிமன்றத்தின் அசல் வழக்கு எண்.13/2011 ல் உள்ள சொத்துக்கள் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது.
3) திருவாரூர் மாவட்ட நீதிமன்றத்தின் அசல் வழக்கு எண்.13/2011 ல் வழக்கில் நானும் ஒரு தரப்பினர் என்பதால் அதிலுள்ள விபரங்கள் எனக்கு தெரியும் என்றால் எனக்கு அழைப்பாணை வராததால் அதுப்பற்றிய விபரம் எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதி 2 முதல் 4 பிரதிவாதிகளிடமிருந்து முறையாக

சொத்துக்களை கிரயம் வாங்கினார் என்றும், நான் காழ்ப்புணர்ச்சி காரணமாக அந்த கிரய ஆவணத்தின் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி கிரயம் வாங்கிய விபரம் எனக்கு ஆரம்பத்தில் தெரியவந்தும் வழக்கிற்காக தற்போது தெரிய வந்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**2 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

2 முதல் 4 பிரதிவாதிகள் ஒருதலைப்பட்சம் ஆக்கப்பட்டதால் குறுக்கு விசாரணை இல்லை.

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

NATARAJAN AZHAGESAN

Digitally signed by NATARAJAN AZHAGESAN
DN: cn=NATARAJAN AZHAGESAN, ou=THANJAVUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2025.09.08 17:51:55 +0530

District Munsif
Mannargudi.